# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,554 – 1965 නොවැම්බර් 12 වැනි සිකුරාදා – 1965.11.12

14,554 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 12 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III—காணிகள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேருகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் |
|---|---|
| *காணி நிர்ணய அறிவித்தல்கள்—* | |
| முன்னறிவித்தல்கள் .. .. .. | |
| இறுதிக் கட்டளைகள் .. .. .. | — |
| *அரசாங்க அதிபர்களினுற் காணி விற்பனைகள்—* | |
| மேல் மாகாணம் .. .. .. | — |
| மத்திய மாகாணம் .. .. .. | — |
| தென் மாகாணம் .. .. .. | — |
| வட மாகாணம் .. .. .. | — |
| கீழ் மாகாணம் .. .. .. | — |
| வடமேல் மாகாணம் .. .. .. | — |
| வடமத்திய மாகாணம் .. .. | — |
| ஊவா மாகாணம் .. .. .. | — |
| சபரகமுவா மாகாணம் .. .. | — |
| *நிர்ணய உத்தியோகத்தர்களின் காணி விற்பனைகள்—* | |
| மேல் மாகாணம் .. .. .. | — |
| மத்திய மாகாணம் .. .. .. | — |
| தென் மாகாணம் .. .. .. | — |
| வட மாகாணம் .. .. .. | — |
| கீழ் மாகாணம் .. .. .. | — |
| வடமேல் மாகாணம் .. .. .. | — |
| வடமத்திய மாகாணம் .. .. | — |
| ஊவா மாகாணம் .. .. .. | — |
| சபரகமுவா மாகாணம் .. .. | — |
| காணி கொள்வனவுபற்றிய அறிவித்தல்கள் .. | 579 |
| காணி அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் .. | 584 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் .. .. | — |
| நானுவித காணி அறிவித்தல்கள் .. .. | 585 |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் .. | — |


## காணி கொள்வனவுபற்றிய அறிவித்தல்கள்

### 1964 ம் ஆண்டின் 28 ம் இல. காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறுன காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460)

**5 ம் பிரிவின்படியான பிரகடனம்**

*கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதாயிருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக் கொள்ளப்படும் என்றும் அச்சட்டத்தின் 5 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சர் சீ. பீ. டி சில்வா ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.*

*கொழும்பு மாவட்டம், ஹேவகம் கோருளை கிழக்கு, மேதபற்று, பஹால பாதுக்கை என்றும் இடத்தில் டெல்கஹவத்த என்னும் காணியிலிருந்து 100 அடி × 15 அடி விஸ்தீரணமுள்ள ஒரு துண்டு காணி. எல்லைகள் பின்வருமாறு :—*

வடக்கு, கிழக்கும் : டெல்கஹவத்தை என்னும் காணியின் ஒரு பகுதி ;
தெற்கு : தேவகே மாவத்தை ;
மேற்கு : டெலகஹவத்தை என்னும் காணியின் ஒரு பகுதி.

குறிப்பு இல. ஜே 64/65 எல்ஜீ 254/QE 243
கொழும்பு,
1965 ம் ஆண்டு ஒக்ரோபர் மீ 14 ந் உ.

சீ. பீ. டி சில்வா,
காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சர்.

11-408—12.11.1965 ந் திகதிய வர்த்தமானி இல. 14,554

---

### 1964 ம் ஆண்டின் 28 ம் இல. காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறுன காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460)

**5 ம் பிரிவின்படியான பிரகடனம்**

*கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதாயிருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக் கொள்ளப்படும் என்றும் 1964 ம் ஆண்டின் 28 ம் இல. காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறுன காணி எடுத்தல் சட்டத்தின் 5 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சர் சீ. பீ. டி சில்வா ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.*

*கொழும்பு மாவட்டம், சலபிற்றிகோருளை, லக்சபதிய என்னும் இடத்தில் கெக்கிறின்டெனியவத்தை என்னும் காணியிலிருந்து சுமார் 33 பேர்ச் (120 அடி × 75 அடி) விஸ்தீரணமுள்ள ஒரு காணித்துண்டு. எல்லைகள் பின்வருமாறு :—*

வடக்கு : பொன்செக்கா ரோட்டு ;
கிழக்கும், தெற்கும் : ஜேஸ்திராரும மகா விகாரை ரோட்டு ;
மேற்கு : ஜேஸ்திரதான வித்தியாலய வளவு.

குறிப்பு இல. ஜே 64/65 ச 308 (QE 297)
கொழும்பு,
1965 ம் ஆண்டு ஒக்ரோபர் மீ 21 ந் உ.

சீ. பீ. டி சில்வா,
காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சர்.

11-407—12.11.1965 ந் திகதிய வர்த்தமானி இல. 14,554

## 1964 ம் ஆண்டின் 28 ம் இல. காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறுன காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460)

### 5 ம் பிரிவின்படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதாயிருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக் கொள்ளப்படும் என்றும் 1964 ம் ஆண்டின் 28 ம் இல. காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறுன காணி எடுத்தல் சட்டத்தின 5 ம் பிரிவின (1) ம் உட்பிரிவின் பிரகாரம் காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சர் சாள்ஸ் பேசிவல் டி சில்வா ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

பின்வரும் எல்லைகளாற் சூழப்பட்டுள்ளதும், களுத்துறை மாவட்டத்தில், கங்கபட பத்துவ பிரிவுக் காரியாதிகாரியின் பிரிவில், வெல்கம கிராம சேவையாளர் பிரிவில், வெல்கம கிராமத்தில் அமைந்துள்ள வெல்கம தோட்டம் என்றழைக்கப்படும் சுமார் 2 ஏக்கர்கள் விசாலமுள்ள காணி :—

வடக்கு : வெல்கம தோட்டத்தின் வயலும், தோட்டப் பாதையும், நீரோடையும் ;
கிழக்கு : வெல்கம தோட்டத்தின் வயலும், அடிப்பாதைக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலமும் ;
தெற்கு : அடிப்பாதையும், ஒதுக்கப்பட்டுள்ள நிலமும், பொலேகெமடை வெல்கமவிலிருந்து மோல்காவை பரகொடைக்குச் செல்லும் கிராமச் சபைத் தெருவும், நீரோடையும் ;
மேற்கு : நீரோடை.

குறிப்பு இல. ஜே. 63/64 ச 1047-இஅ/3/121
கொழும்பு,
1965 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 11 ந் உ.

சீ. பீ. டி சில்வா,
காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சர்.

11-405—12.11.1965 ந் திகதிய வர்த்தமானி இல. 14,554

---

## 1964 ம் ஆண்டின் 28 ம் இல. காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறுன காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460)

### 5 ம் பிரிவின்படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதாயிருக்கின்றதெனறும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின பிரகாரம் அது எடுத்துக் கொள்ளப்படும் என்றும் அச்சட்டத்தின 5 ம் பிரிவின (1) ம் உட்பிரிவின பிரகாரம் விவசாய, காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சர் சீ. பீ. டி சில்வா ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

கொழும்பு மாவட்டம், கொழும்பு காரியாதிகாரியின பிரிவு, கொழும்பு மாநகரசபையின் 26 ம் வட்டாரம் கொள்ளுப்பிட்டியில் அல்விஸ் இடத்தில் 34/5 ம் வரிமதிப்பு இலககத்தையுடைய சுமார் 0 ஏ. 0 று. 2·25 பேர்ச் விஸ்தீரணமுள்ள ஒரு காணி. எல்லைகள் பின்வருமாறு :—

வடக்கு : பிரதான படம் 4812 ல் 3 ம் துண்டென விபரிக்கப்பட்ட காணி ;
கிழக்கு : பிரதான படம் 4812 ல், 3 ம் துண்டென விபரிக்கப்பட்ட காணியும் வரிமதிப்பு இல. 30 க் கொண்ட காணியும் ;
தெற்கு : வரிமதிப்பு இல. 30 க் கொண்ட காணி ;
மேற்கு : பிரதான படம் 4812 ல் 3 ம் துண்டென விபரிக்கப்பட்ட காணியும் வரிமதிப்பு இல. 30 க் கொண்ட காணியும்.

குறிப்பு. இல. ஜே 64/65 எல்ஜி 379 (RQ 492)
கொழும்பு,
1965 ம் ஆண்டு ஒக்ரோபர் மீ 27 ந் உ.

சீ. பீ. டி சில்வா,
காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சா.

11-361—12.11.1965 ந் திகதிய வர்த்தமானி இல. 14,554

---

## 1964 ம் ஆண்டின் 28 ம் இல. காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறுன காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460)

### 5 ம் பிரிவின்படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதாயிருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின பிரகாரம் அது எடுத்துக கொள்ளப்படும் என்றும் 1964 ம் ஆண்டின் 28 ம் இல. காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறுன காணி எடுத்தல் சட்டத்தின் 5 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சர் சாள்ஸ் பேசிவல் டி சில்வா ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

கீழ்க்காணும் எல்லைகளால் வரையறுக்கப்பட்டு கொழும்பு மாவட்டம் கொழும்புப் பிரிவுகாரியாதிகாரியின சல்பிற்றி கோறளே பிரிவு கோட்டை-கல்கிசை கிராமச்சங்கத்திற்குள்ளான பொறலெஸ்கமுவவிலிருக்கும் சுமார் 2 று. 5 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ள “ லேக் வியூ ” என அழைக்கப்படும் ஒரு துண்டுக்காணி :—

வடக்கு : தெஹிவல மஹரகம பகிரங்கத்தெரு ;
கிழக்கு : டபிளயு. எம். டி. ஹோரவிஞலும் மறுபேரிஞலும் உரிமை கோரப்படும் இறைவரி இல. 243 கொண்ட பொறலெஸ்கமுவ லேக் ரோட் ;
தெற்கும், மேற்கும் : அதே காணியின மிகுதிப்பங்கு.

குறிப்பு இல. J 64/65 LG 349—RQ 489
கொழும்பு,
1965 ம் ஆண்டு ஐப்பசி மீ 15 ந் உ.

சீ. பீ. டி சில்வா,
காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சர்.

11-321—12.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,554

## 1964 ம் ஆண்டின் 28 ம் இல. காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறுன காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460)

### 5 ம் பிரிவின்படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதாயிருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக் கொள்ளப்படும் என்றும். 1964 ம் ஆண்டின் 28 ம் இல. காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறுன காணி எடுத்தல் சட்டத்தின் 5 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சர் சாள்ஸ் பேசிவல் டி சில்வா ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

கொழும்பு மாவட்டம், கொழும்பு பிரிவுக்காரியாதிகாரியின் பிரிவு, கொழும்பு நகரசபை எல்லைக்குள் கறுவாத்தோட்ட வட்டாரத்தில், அளவை ஆணையாளரால் தயாரிக்கப்பட்ட முடிக்குரிய படம் இல. 18 இல் துண்டுகள் 1 தொடக்கம் 8 இற்குள் உட்பட்ட குத்தகைப்படம் இல. 505, 524, 2649, 2439 ஐயும் குத்தகை விளக்கப்படம் இலக்கம் 1275 ஐயும் கொண்டு முடிக்குரிய குத்தகையாகக் கொடுக்கப்பட்ட, ஏறக்குறைய 93 ஏக்கர் 3 றூட் 9·49 பேர்ச்சஸ் விசாலமான ஹவலக் றேஸ் கோர்ஸ் என தற்சமயம் தெரியப்படும் காணி.

குறிப்பு இல. J, 64/65 E. 453 R/Q. 502
கொழும்பு,
1965 ம் ஆு புரட்டாதி மீ 5 ந உ.

சீ. பி. டி சில்வா,
காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சர்.

11–362—12.11.1965 ந் திகதிய வர்த்தமானி இல. 14,554

---

குறி. இல. எல். டீ/எ 150.

## 1964 ம் ஆண்டின் 28 ஆம் இலக்கக் காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறுன காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

### 7 ம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

கண்டி மாவட்டம், பாத்த ஹேவாஹெட்டை பிரிவு அதிகாரியின் பகுதி, ஹேவாவிஸ்ஸ கோரளை, உடபிட்டிய கிராமத்திலுள்ள, உலஹிட்டி தென்ன பத்தன அல்லது பங்கலாவத்த, உலஹிட்டியதென்ன பத்தன எனப்படும் காணியில் 0 ஏ. 3 று. 38·8 பே. விசாலமுள்ள இரு காணித் துண்டுகள். இக் காணியை அளவை செய்யப்பட்டு பிரதமப் படம் ஏ. 3149 ல் துண்டு 1 ம், 2 ம், என விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

| காணிக்கு உரிமை கோருபவரின் பெயர் | விலாசம் |
|---|---|
| பி. எம். அமீனு உம்மா, .. .. .. .. | உடபிட்டிய, பட்டியகம, பல்லேகம, தெல்தொட்ட. |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1965 ம் ஆு டிசம்பர் மாதம் 13 ந் தேதி 3.15 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபெற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1965 ம் ஆு டிசம்பர் மாதம் 6 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். காணியின் உரிமையை ஒப்புவிக்கும் உறுதிகளையும் மற்றும் ஏதும் சாதனங்களையும் கேட்கப்படும் நட்ட ஈட்டுத்தொகையை நியாயமானதென நிருபிக்கக்கூடிய சாதனங்களையும் விசாரணையின்போது சமர்ப்பிக்க வேண்டும்.

கண்டிக் கச்சேரி,
1965 ம் ஆு ஒக்டோபர் மீ 28 ந உ.

எஸ். மாரஸந்த,
கண்டி மாவட்ட உதவி அரசாட்சி ஏசண்டு.

11–358—12.11.1965 ந் திகதிய வர்த்தமானி இல. 14,554

---

## 1964 ம் ஆண்டின் 28 ஆம் இலக்கக் காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறுன காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

### 7 ம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

பிரதம படம் கொ 88—பெத்ததேதெறமுல்ல.

| துண்டு இல. | காணியின் பெயர் | விபரம் | உரிமைகோருபவர் | விஸ்தீரணம் ஏ. று. பே. |
|---|---|---|---|---|
| 1 | கஹற்றகஹவத்தை .. | றப்பர் தோட்டம், 273 றப்பர் மரம் 6 வருடமானது .. | சிறியாவதி டயஸ் ஜெயசூரியா 66, மீகொட | 1 1 21·1 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1965 ம் ஆு மார்கழி மாதம் 21 ந் தேதி காலை 9.30 மணிக்கு கொழும்புக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபெற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1965 ம் ஆு மார்கழி மாதம் 14 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். கோரிக்கை சம்பந்தமான உறுதிகளும் சாசனங்களும் விசாரணையின் போது சமர்ப்பிக்கப்படவேண்டும்.

கொழும்புக் கச்சேரி,
1965 ம் ஆு கார்த்திகை மீ 4 ந உ.

ஏ. பி. ப்பி. மனம்பெரி,
மேலதிக மாவட்ட உதவி அரசாட்சி ஏசண்டு.

11–417—12.11.1965 ந் திகதிய வர்த்தமானி இல. 14,554

## 1964 ஆம் ஆண்டின் 28 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 460 ம் அத்தியாயமான காணி எடுத்தற் சட்டம்

### 7 ம் பிரிவின்படியான அறிவித்தல்

பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ம் ஆண்டின் 28 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட (460 ம் அத்தியாயமான) காணி எடுத்தற் சட்டத்தின் 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான், இத்தால அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

சிலாப மாவட்டம், பிற்றிக்கால் கோறளை வடக்கு பிரிவுக் காரியாதிகாரியின் பிரிவில், முன்னேஸ்வரம் பத்துவாவில் உள்ள மருதங்குளம் கிராமத்திலிருக்கும் தல்காவத்தை என அழைக்கப்படும் மொத்தம் 0 ஏ. 2 று. 29.2 பேர்ச் விசாலமுள்ள 4 துண்டுக் காணிகள். விளக்கக்கூறின் பிரதம படம் இல. ஏ. 1860 இன் துண்டுகள் 1, 2, 3, 4 ஆகியன.

| துண்டு இல. | காணியின் பெயர் | காணியின் விபரம் | உரிமை | விசாலம் ஏ. று. பே. |
|---|---|---|---|---|
| 1 | தல்காகவத்தை .. | 50 வயதுடைய 4 தென்னை, 70 வயதுடைய 1 தால் மரம் ஆகியன உள்ள ஒரு தென்னந்தோட்டம் | ஜே. எம். மானல்ஹாமி, ஆர். என. எஸ். தங்கம்மா, ஆர். எஸ். எஸ். பொன்னம்மா ஆதியோர், மருதங்குளம், சிலாபம் | 0 1 25·7 |
| 2 | ஷை .. | 70 வயதுடைய ஒரு தென்னை உள்ள ஒரு தென்னந்தோட்டம் | ஆர். எஸ். ஏ. முத்தையா, கே. தங்கம்மா ஆதியோர், மருதங்குளம், சிலாபம் | 0 0 23·7 |
| 3 | ஷை .. | ஷை .. | ஏ. விக்ரோறியா பர்னாந்து, மருதங்குளம், சிலாபம் | 0 0 15·2 |
| 4 | ஷை .. | ஷை .. | ஏ. வெரோனிக்கா பர்னாந்து மருதங்குளம், சிலாபம் | 0 0 4·6 |
| | | | | 0 2 29·2 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1965 ம் ஆடு டிசம்பர் மாதம் 17 ந் தேதி காலை 10.00 மணிக்கு சிலாபம் டீ. ஆர். ஓ. கந்தோரில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக் காணியில அவர்களுக்குள்ள உடந்தைகளின தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபெற்றிய அவர்களின கோரிக்கைகளின விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1965 ம் ஆடு டிசம்பர் மாதம் 10 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

புத்தளம் கச்சேரி,
1965 ம் ஆடு நவம்பர் மீ 1 ந் உ.

தா. பாலச்சந்திரன்,
புத்தளம் மாவட்ட உப அதிபர்.

11–359—12.11.1965 ந் திகதிய வர்த்தமானி இல. 14,554

---

இல. கியூஸி/234/கெ.

## 1964 ம் ஆண்டின் 28 ஆம் இலக்கக் காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறுன காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

### 7 ம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

ஆரம்பப்படம் இல. கொ. 66 டங்கல்ல கிராமம், சியானெகோறளை கிழக்கு, கொழும்பு மாவட்டம்.

| துண்டு இல. | காணியின் பெயர் | விபரம் | உரிமைகோருபவரின் பெயர் | விஸ்தீரணம் ஏ. று. பே. |
|---|---|---|---|---|
| 1 | கெலகஹாவத்த .. | 30-35 வயதுடைய 53 தென்னை மரங்கள், 30-35 வயதுடைய 5 பலாமரங்கள், 30-35 வயதுடைய 19 கசு மரங்கள், 30-35 வயதுடைய 3 ஈரப்பலா மரங்கள், 20 வயதுடைய 6 கொடப்பார மரங்கள், 25 வயதுடைய 2 கொறுக்கா மரங்கள், 20 வயதுடைய 15 கமுக மரங்கள் கொண்ட தென்னந்தோட்டமும் 15 வயதுடைய 118 றப்பர் மரங்கள் கொண்ட றப்பர் தோட்டமும் | ஜெ. ஏ. ஏரன்சிஞ்ஞோ, ஜெ. ஏ. ஓதிரிஸ் சிஞ்ஞோ, ஜெ. ஏ. பிறம்பி சிஞ்ஞோ, ஜெ. ஏ. ஜோன் சிஞ்ஞோ, ஜெ. ஏ. பொடிநோனு, ஜெ. ஏ. பொடிஅப்புஹாமி, ஜெ. ஏ. பேமதாஸ, ஜெ. ஏ. சோமசிரி, ஜெ. ஏ. பியதாஸ, டங்கல்ல, பெபிலியாவல. | 1 2 05·7 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1965 ம் ஆடு மார்கழி மாதம் 30 ந் தேதி காலை 9.00 மணிக்கு கொழும்புக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபெற்றிய அவர்களின கோரிக்கைகளின விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1965 ம் ஆடு மார்கழி மாதம் 22 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கொழும்புக கச்சேரி,
1965 ம் ஆடு கார்த்திகை மீ 4 ந் உ.

டி. ராஜரத்தினம்,
காணி கொள்ளும் உத்தியோகத்தர்,
கொழும்பு மாவட்டம்.

11–419—12.11.1965 ந் திகதிய வர்த்தமானி இல. 14,554

குறி. இல. எல் டீ/ஏ 73

## 1964 ம் ஆண்டின் 28 ம் இல. காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460)

### 7 ம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ம் பிரிவின (1) ம் உட்பிரிவின பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

கண்டி மாவட்டம், பாத்த தும்பர பிரிவு அதிகாரியின் பகுதி, பல்லேகம்பஹ கோறளே, தொரகமுவ கிராமத்திலுள்ள ஈரியகல்அங்கேவத்த அல்லது ஓடில்லாவேவத்த எனப்படும் காணியில் 4 ஏ. 3 றூ. 12·5 பெர். விசாலமுள்ள ஒரு துண்டு காணி. இக் காணியை அளவை செய்யப்பட்டு பிரதமப் படம் மஹ 56 ல் துண்டு 1 என விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

| காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் | விலாசம் |
|---|---|
| என். யூ. நாட்சிஅம்மா, .. .. .. .. | தொரகமுவ |
| என். யூ. சீலம்பே, .. .. .. .. | புலத்கம, ஹெம்மத்தகம |
| என். யூ. வல்லி அம்மா, .. .. .. .. | அம்புலாவத்த, கம்பளே |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1965 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ந் தேதி பி.ப. 3.30 மணிக்கு கண்டிக்கச்சேரியில் எனமுனபாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபெற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1965 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 6 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். காணியின் உரிமையை ஒப்புவிக்கும் உறுதிகளையும் மற்றும் எதும் சாதனங்களையும் கேட்கப்படும் நட்ட ஈட்டுத் தொகையை நியாயமானதென நிரூபிக்கக்கூடிய சாதனங்களையும் விசாரணையினபோது சமர்ப்பிக்கவேண்டும்.

எஸ். மாரலந்த,
கண்டி மாவட்ட உதவி அரசாட்சி ஏசண்டு.

கண்டிக் கச்சேரி,
1965 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 28 ந் வ.

11–357—12.11.1965 ந் திகதிய வர்த்தமானி இல. 14,554

---

குறி. இல. எல்டீ/ஏ. 103

## 1964 ம் ஆண்டின் 28 ம் இல. காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

### 7 ம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ம் பிரிவின (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான இத்தால் அறிவிக்கின்றேன.

எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

கண்டி மாவட்டம், பாத்த தும்பர பிரிவு அதிகாரியின் பகுதி, உடகமபஹ கோறளே, சிரிமல்வத்த பல்லேகம்மெத்த கிராமத்திலுள்ள லிங்தொட்டவெலேகும்புர, மாலிகாதென்னேவத்த, எனப்படும் காணியில் 0ஏ. 1றூ. 4·5பெர் விசாலமுள்ள 4 காணித் துண்டுகள். இக்காணியை அளவை செய்யப்பட்டு பிரதமப்படம் மஹ 19 ல் துண்டு 1, 2, 3, 4 என விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

| காணிக்கு உரிமைகோருபவரின்பெயர் | விலாசம் |
|---|---|
| எச். எம். லொக்கு மெனிகே | சிரிமலிவத்த, குண்ணுபான |
| டீ. ஏ. அத்தனுயக்க .. | சிரிமலிவத்த, குண்ணுபான |
| டீ. அத்தனுயக்க .. | சிரிமலிவத்த, குண்ணுபான |
| அமராவதி அத்தனுயக்க .. | போபிட்டிய பாடசாலே, மாரஸ்ஸன |
| சோமவதி அத்தனுயக்க .. | உட வலவ்வ, ஈரியகம, பேராதெனிய |
| ஏ. பீ. வீரகோன் .. | சிரிமல்வத்த, குண்ணுபான |
| வீ. டிங்கிரி பண்டா .. | சிரிமல்வத்த, குண்ணுபான |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1965 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ந் தேதி 9.30 மணிக்கு கண்டிக கச்சேரியில என்முனபாக வெளிப்படுத்தும்படியும் அககாணியில அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபெற்றிய அவர்களின கோரிக்கைகளின விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரஙகளையும் 1965 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். காணியின் உரிமையை ஒப்புவிகக்கும் உறுதிகளையும் மற்றும் ஏதும் சாதானங்களையும் கேட்கப்படும் நட்ட ஈட்டுத் தொகையை நியாயமானதென நிரூபிக்கக்கூடிய சாதனங்களையும் விசாரணையின் போது சமர்பபிக்க வேண்டும்.

கண்டிக் கச்சேரி,
1965 ம் ஆண்டு நொவம்பர் மீ 4 ந் வ.

எஸ். மாரலந்த,
கண்டி மாவட்ட உதவி அரசாட்சி ஏசண்டு.

11–415—12.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,554

தொடர்பு இல : எல்எ. 4092.

## 1964 ம் ஆண்டின் 28 ம் இல. காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

### 7 ம் பிரிவின்படியான அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இல. காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ம் பிரிவின (1) ம் உட்பிரிவின பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

திருக்கோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த கொட்டியார்புரப்பற்று காரியாதிகாரியின் எல்லைக்குட்பட்ட மூதூர் (தமிழ்) கிராமத்துக்குட்பட்ட காணித் துண்டு. துண்டு இல. 3 (ரிபி 377635) ஏனைய துண்டுகள் 3 (ரிபி 354244) துண்டுகள் 5 (ரிபி 354250).

| காணியின் பெயர் | விபரம் | உரித்தாளர் பெயர் | விசாலம் ஏ. று. ப. |
|---|---|---|---|
| " கேணிக்காடு " .. | தென்னந்தோட்டம் .. | நெய்ன முகைதீன்பாவாவின் பின் உரித்தாளர்கள் (மூதூர்) .. | 0 0 26 |
| " கேணிக்காடு " .. | தென்னந்தோட்டம் .. | பக்கீர் நெய்னு, மூதூர் .. | 0 0 31·5 |
| " வெடத்துகாடு " .. | திறந்த வெளி .. | திருமதி. எஸ். விசுவையா (மூதூர்) .. | 1 0 02·5 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியகாரர்மூலமாக 1965 ம் ஆண்டு மார்கழி (டிசம்பர்) மாதம் 9 ம் தேதி மு.ப. 9.30 மணிக்கு திருகோணமலைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபெற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1965 ம் ஆண்டு மார்கழி (டிசெம்பர்) மாதம் 7 ம் தேதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

திருகோணமலைக் கச்சேரி,
1965 ம் ஆண்டு கார்த்திகை மீ 5 ந உ.

எம். பி. சேனநாயக,
திருக்கோணமலை மாவட்ட அரசாட்சி ஏசண்டு.

11-440.—12.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,554

---

## காணி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

எல்பி 166/64

### கிராம விஸ்தரிப்பின் கீழ் காணி வழங்குவதற்கு தகுதியானவர்களைத் தெரிவுசெய்வதற்குக் காணிக் கச்சேரி வைத்தல்

இத்தால் திருக்கோணமலை அரசாங்க அதிபர் தரும் அறிவித்தலாவது (464 ம் அத்தியாயம் கொண்ட) காணி அபிவிருத்திச் சட்டத்தின்கீழ், கீழே தரப்பட்டிருக்கும் " ஏ " அட்டவணைக்கிணங்க காணிபெறத் தகுதியானவர்களுக்கு ஒரு காணிக்கச்சேரி நடாத்தப்பெறும். இக்காணிக் கச்சேரி நடைபெறவிருக்கும் இடமும், திகதியும் விண்ணப்பக்காரர்களுக்குப் பின் அறிவிக்கப்படும்.

2. விண்ணப்பிக்க விரும்புவோர் தங்கள் விண்ணப்பங்களை கீழ் காட்டப்பட்டுள்ள " பி " அட்டவணைக்கிணங்கப் பூர்த்திசெய்து 1.12.1965 திகதிக்குமுன் திருக்கோணமலைக் கச்சேரியில் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட வேண்டும். எக்காரணங்கொண்டும் வேறுவிதமாகவரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பம் அனுப்பும் தபால் உறையில் இடதுபக்க மேல் மூலையில், " பெரியகுளம் " எனக் குறிபபிடத்தவறக்கூடாது. " பி " அட்டவணைக்கிணங்க தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் தகுதியற்றவைகளாக கணிக்கப்படும்.

3. விண்ணப்பித்த ஒவ்வொரு விண்ணப்பதாரரும் காணிக்கச்சேரிக்கு நேரில் சமூகந்தரல் வேண்டும். முடியாவிடின் அவரது எழுத்துமூலம் அதிகாரம் பெற்ற ஒருவர் அவருக்காக சமூகந்தரலாம்.

4. காணிக்கச்சேரி சம்பந்தமான சகல விபரங்களும் இக்கச்சேரி நடைபெறும் தினத்தன்று அறிந்து கொள்ளலாம்.

5. தெரிவுசெய்யப்பட்ட அனைவரும் காணிக்குரிய வருடாந்த வாடகைப் பணத்தை உரிய காணி காட்டப்படுவதற்கு முன்பே செலுத்தும்படி கேட்டுக்கொள்ளப்படுவர்.

6. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொருவரும், காணி காட்டப்பட்ட மூன்று மாத காலத்துள் அரசாங்க அதிபரால் வரையப்பட்டு, குறைந்தபட்ச சேவைகளைப் பூர்த்திசெய்யுமளவிற்கு அவரவர் சொந்த செலவில் வீடொன்று அமைத்து குடிபுகுந்து காணியை அபிவிருத்தி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுவர். எவ்வித மானியமோ, உதவியோ அரசினரால் வழங்கப்படமாட்டாது.

7. வழங்குவதற்கென ஒதுக்கப்பட்ட காணியில் சட்டவிரோதமாகக் குடியேறினால், அவர்மீது வழக்குத்தொடரப்படுவதுமல்லாமல், அவருடைய விண்ணப்பம் பரிசீலனைக்கும் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

8. இக்காணிக்கச்சேரிபற்றி முக்கியமான மாற்றங்களேதும் ஏற்படுமாயின், அம்மாற்றங்கள் உரிய காலத்தில் அறிவிக்கப்படும்.

9 திருக்கோணமலை, உப்புவெளி, சாம்பல்தீவு, நிலாவெளி ஆகிய கிராம சேவையாளர் பகுதிகளில் குறைந்தது இரண்டு வருடங்கட்கு மேல் தொடர்ந்து வதிபவர்களாக உள்ள காணியற்றவர்களுக்காகவே இக்காணிக்கச்சேரி நடைபெறுகிறது.

10. ஒவ்வொரு விண்ணப்பதாரர்களும், காணிக்கச்சேரி நடைபெறும் தினத்தன்று, கீழ்க்காணும் விபரங்களை ஆதாரங்காட்டுதல் வேண்டும்.

(அ) விண்ணப்பதாரரதும், அவர்குடும்பத்தினதும் தற்போதைய வழங்கிலுள்ள உணவுப் பங்கீட்டுப் புத்தகங்கள்.

(ஆ) அரசாங்க அதிபரின் தகுதிக்கிணங்க, 9 ம் நிபந்தனைப்படி குறிப்பிட்ட பகுதியில் தொடர்ந்து வசித்தற்கான ஆதாரங்கள்.

(இ) பாராளுமன்ற வாக்காளர் இடாப்பில் தத்தம் சம்மதிச்சீட்டிடும் பகுதியும் தொடர் இலக்கமும்.

தொடர்ந்து வாழ்ந்துவருவதற்குரிய ஆதாரங்களை சமர்ப்பித்தல் விண்ணப்பிப்பவரின் கடமையாகும்.

ஒப்பம் : பந்துல எஸ். த சில்வா,
மாவட்டக் காணி அதிகாரி.
அரசாங்க அதிபருக்காக,
திருக்கோணமலை மாவட்டம்.

திருக்கோணமலைக் கச்சேரி,
1965 ம் ஆண்டு ஒக்ரோபர் மீ 25 ந உ.

அட்டவணை " ஏ "

திருக்கோணமலை–அனுராதபுரம் மராமத்து இலாகா பிரதான வீதியின் 6 ம்–8 ம் மைல் கல்லிற்கு இரண்டு மைல் தூரத்துள் அடங்கிய பூமி. ஒவ்வொன்றும் இரண்டு ஏக்கர் மேட்டு நிலத்தைக் கொண்ட காணித் துண்டுகள். இதற்குமுன் அரசினரால் அனுமதிப்பத்திரம் கொடுக்கப் பட்டிருக்கும் பூமியைத் தவிர எஞ்சிய பாகம்.

அட்டவணை " பி "

பெரிய குளத்தின்கீழ் காணி கோரும் விண்ணப்பம்

1. விண்ணப்பதாரரின் பெயர் : ————.
2. விலாசம் : ————.
3. விண்ணப்பதாரர் வயது : ————.
4. கிராமமும் அங்கு வதியும் காலமும் : ————.
5. தொழில் : ————.
6. பாதுகாப்பிலுள்ள குழந்தைகளின் தொகையும் அவர்களின் வயது விபரமும் : ————.
7. பராமரிப்பில் உள்ள மற்றவர்களின் விபரமும் அவர்கள் உறவு முறையும் : ————.
8. விண்ணப்பதாரரின் பெயரில் அல்லது அவர் மனைவி பெயரில் அல்லது பராமரிப்பில் உள்ளோர் பெயரில் உள்ள சொந்தக் காணியும் முடிக்குரிய காணியும் (நெற்காணி, மேட்டுக்காணி உட்பட்ட விபரங்கள்) : ————.
9. முடிக்குரிய காணியில் வலோற்காரமாக குடியிருப்பவரா ? ஆயின், எவ்விடத்திலென்பதும், எத்திகதியிலென்பதும் : ————.
10. உணவுப் பங்கீட்டுப் புத்தக இல. :————.
11. உணவுப் பங்கீட்டுப் புத்தகத்தில் உள்ள கிராம சேவையாளர் பகுதி இலக்கமும், குடியிருப்பு அட்டவணை இடாப்பு இலக்கமும் :————.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்

திகதி : ————.

11–437—12.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,554

---

# நானாவித காணி அறிவித்தல்கள்

எனது இலக்கம் 4/8/1819
அ. அ. இலக்கம் எல்ஜி/435

## முடிக்குரிய காணிச்சட்டம் 21 (2) ன் கீழ் அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்டம், பூனகரி காரியாதிகாரியின் பிரிவின் கீழ் உள்ள மட்டுவில் நாடு கிராமத்திலுள்ள பீ. பீ ஏ. 985 லிருந்து பரப்பு ஏ. 0, று. 0, பே. 27·7 பரப்பைக்கொண்ட முடிக்குரிய காணித்துண்டை பதிவிலக்கம் ஜே ஈ. 152 க் கொண்ட பூநகரிப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் குத்தகையாகக் கேட்டு விண்ணப்பித்துள்ளது. விண்ணப்பித்துள்ள நிலப் பிரமாணம் ஏ. 0, று. 0, பே. 27·7 இச்சங்கம் இந்த நிலத்தில் சங்கத்திற்குத் தேவையான காரியாலயக் கட்டிடம், பண்டகசாலை, விற் பனையறை ஆகியவற்றைக் கட்டும்.

2. குத்தகை கேட்டுள்ள நிலம் கொடுக்கக்கூடியதாக இருக்கின்றது. எனவே இக்குத்தகையை ஏனைய சட்டதிட்டங்களுடன் கீழ்க் காணப்படுவன வற்றிற்கும் அமைவாக குத்தகையாகக் கொடுக்கத் தீர்மானிக்கப் பட்டுள்ளது :—

(அ) காலம் : 30 வருடம் ;
(ஆ) வாடகை : 16/80 வருடம் ;
(இ) குத்தகைக்காரர் இந்த நிலத்தில் இச்சங்கத்திற்குத் தேவையான காரியாலயக் கட்டிடத்தையும், பண்டகசாலைக் கட்டிடத்தையும், விற்பனை அறையையும் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரின் திருப்திக்கேற்ப குத்தகை தொடங்கி ஒரு வருடத்திற்குள் யாழ்ப் பாண மாவட்ட அரசாங்க அதிபரின் திருப்திக்கேற்ப கட்டி முடிக்கவேண்டும் ;
(ஈ) இக்குத்தகையை குத்தகைக்காரர் மேற்படி சங்கத்திற்குத் தேவை யான சங்கக் கட்டிடங்களைக் கட்டிப் பாவிக்கலாமே தவிர வேறு எதற்கும் பாவிக்கக்கூடாது.

இக்குத்தகை கொடுப்பது சம்பந்தமாக ஏதாவது தெரிவிக்க விரும்பி யோர் கீழ்க்குறிக்கப்பட்டுள்ள திகதியிலிருந்து 6 வாரங்களுக்குள் தக்க காரணங்களை எழுத்துமூலமாக எனக்குத் தெரிவிக்காவிடில் இக்குத்தகை வழங்கப்படும்.

டி. கே. வீ. பீ. றணசிங்க,
காணிக்கமிஷனருக்காக.

காணிக்கமிஷனர் காரியாலயம்,
காலிமுக வீதி, கொழும்பு,
1965 ம் ஆண்டு நவெம்பர் மீ 12 ந் உ.

11–333—12.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,554

---

எனது இலக்கம் 4/8/1858
அ. அ. இலக்கம் எல்/எம் எஸ் அன் ஈபீ/710

## முடிக்குரிய காணிச்சட்டம் 21 (2) ன் கீழ் அறிவித்தல்

மட்டக்களப்பு மாவட்டத்தில், மண்முனை தெற்கு எருவில் போரதீவு காரி யாதிகாரியின் பிரிவின் கீழ் குருக்கல் மடம் கிராமத்திலுள்ள முடிக்குரிய காணியிலிருந்து ஏ. 0, று. 1, பே. 0 பரப்புள்ள காணியைக் குத்தகையா கத் தரும்படி கேட்டு விண்ணப்பித்துள்ளார்கள். இக்காணி குருக்கல் மடம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குத் தேவையான கட்டிடங்களை ஸ்தாபிப்பதற்கேயாகும். கூட்டுறவுச் சங்கத்தின் பதிவிலக்கம் ப்பீ.சீ. 16. பதிவுத்திகதி 23.12.58.

விண்ணப்பித்துள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :—

வடக்கு : ஒழுங்கை ;
தெற்கு : றோட்டு ;
கிழக்கு : ஒழுங்கை ;
மேற்கு : ஒழுங்கை.

3. விண்ணப்பித்த காணி குத்தகையாக வழங்கக்கூடியதாக விருப்ப தால் ஏனைய நிபந்தனைகளுடன் கீழ்வருவனவற்றிற்கும் அமைவாக குத்தகை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது :—

(அ) காலம் : 30 வருடம் ;
(ஆ) குத்தகைப்பணம் வருடத்திற்கு ரூபா 2 ;
(இ) குத்தகைக்காரர் குத்தகை தொடங்கிய திகதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் மட்டக்களப்பு அரசாங்க அதிபரின் திருப்திக் கமைய தேவையான காரியாலயக்கட்டிடங்களை கட்டிமுடிக்க வேண்டும்.
(ஈ) குத்தகைக்காரர் இக்காணியை மேற்படி சங்கத்தின் தேவைகளுக் கல்லாது வேறு எததேவைக்கும் பாவிக்கக்கூடாது.

4. இக்குத்தகை கொடுக்கக்கூடாதெனத் தகுந்த காரணங்களை கீழ்க் குறிப்பிடப்பட்ட திகதியிலிருந்து ஆறு வாரங்களுக்குள் தெரிவிக்காவிடில் இக்குத்தகை வழங்கப்படும்.

டீ. கே. வீ. பீ. றணசிங்க,
காணிக்கமிஷனருக்காக.

காணிக்கமிஷனர் காரியாலயம், கொழும்பு,
1965 ம் ஆண்டு நவெம்பர் மீ 12 ந் உ.

11–334—12.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,554

எனது இலக்கம் 4/8/1874
அ.அ. இலக்கம் 353/875

## முடிக்குரிய காணிச்சட்டம் 21 (2) ன் கீழ் அறிவித்தல்

இலக்கம் கே. யூ. 1039 க் கொண்ட மகமேரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், குருநாகலை மாவட்டத்தில், கதலிஸ் பக கிழக்கு கோரளே வன்னிகத்பத்துவிலிருந்து குறுகலெவ கிராமத்தில் உள்ள முடிக்குரிய காணியிலிருந்து 1 ஏக்கர் காணியைக் குத்தகையாகத்தரும்படி கேட்டு விண்ணப்பித்துள்ளது. இச்சங்கம் இந்த நிலத்தில் சங்கத்திற்குத் தேவையான கூட்டுறவுச்சங்கக் கட்டிடத்தையும், பண்டகசாலையையும் கட்டுவதற்காகக் கேட்டுள்ளது.

2. வடக்குப்பக்கமாக : ஈன்பண்டாவினால் சட்டவிரோதமாகப் பிடித்துள்ள காணி ;
கிழக்குப்பக்கமாக : முடிக்குரிய காடு ;
தெற்குப்பக்கமாக : கிராமச்சங்க ரோட்டு ;
மேற்குப்பக்கமாக : வீதி.

3. குத்தகைகேட்டுள்ள காணி கொடுக்கக்கூடியதாகவுள்ளது. எனவே ஏனைய நிபந்தனைகளுடன் பின்வருவனவற்றிற்கும் அமைய இக்காணியைக் குத்தகையாகக் கொடுக்கத்தீர்மானிக்கப்பட்டுள்ளது :—

(அ) காலம் : 30 வருடம் ;

(ஆ) வாடகை : வருடமொன்றிற்கு 4/- ரூபா ;

(இ) குத்தகைக்காரர் இந்தகுத்தகை தொடங்கி ஒரு வருடத்திற்குள் இந்த நிலத்தில் குருநாகலை மாவட்ட அரசாங்க அதிபரின் திருப்திக்கமைய இந்த நிலத்தில் மேற்படி சங்கத்துத் தேவைக்கான ஒரு காரியாலயக் கட்டிடத்தையும், பண்டகசாலையையும் கட்டி முடிக்கவேண்டும் ;

(ஈ) குத்தகைக்காரர் இந்த நிலத்தை மேற்படி சங்கத்துத் தேவைக்கான கட்டிடங்களைக் கட்டுவதற்காகவேயல்லாது வேறு எவ்வித தேவைக்கும் பாவிக்கக்கூடாது.

4. இக்குத்தகை கொடுக்கக்கூடாதெனத் தகுந்த காரணங்களைக் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதியிலிருந்து ஆறு வாரங்களுக்குள் எழுத்து மூலம் தெரிவிக்காவிடில் இக்குத்தகை வழங்கப்படும்.

டீ. கே. வி. ப்பீ. றணசிங்கா,
காணிக்கமிசனருக்காக.

காணிக்கமிசனர் காரியாலயம்,
கொழும்பு,
1965 ம் ஆண்டு நவம்பர் மீ 12 ந் உ.

11-461—12.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,554

---

எனது இலக்கம் 4/8/1424
அ.அ. இலக்கம் எல்ஈ. 2437

## முடிக்குரிய காணிச்சட்டம் 21 (2) ன் கீழ் அறிவித்தல்

பதிவிலக்கம் பீஎம்/189 க் கொண்ட மகொன்வெவப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், புத்தளம் மாவட்டத்தில், ராசவன்னிப்பளாத்தவில் மகொன்வெவக்கிராம கிராம சேவகர் பிரிவிலிருந்து, 13 ஏ. 0 றூ. 00பேச். பரப்புள்ள மகொன்வெவவிலிருந்து, மகொன்வெவ பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்திற்குத் தேவையான கூட்டுறவுச்சங்கத்துக் கட்டிடங்களைக் கட்டுவதற்காக 1 ஏ. 0 றூ. 00 பேர்ச், பரப்புள்ள நிலத்தைக் குத்தகையாகத்தரும்படி கேட்டு விண்ணப்பித்துள்ளது.

2. விண்ணப்பித்த காணியின் எல்லைகள் பின்வருமாறு :—

வடக்கு : எல்டீ. ஓ. துண்டுகள் ;
தெற்கு : முடிக்குத்தேவைக்காக ஒதுக்கப்பட்ட காணி ;
கிழக்கு : நீர்ப்பாசல் வீதி ;
மேற்கு : முடிக்குத்தேவைக்காக ஒதுக்கிய காணி.

3. விண்ணப்பித்த காணி குத்தகைகாகக் கொடுக்கக்கூடியதாக இருக்கின்றது. எனவே ஏனைய சட்டங்களுடன் பின்வருவனவற்றிற்கும் அமைவாகக் குத்தகைகொடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது :—

(அ) காலம் : 30 வருடம் ;

(ஆ) வாடகை : வருடம் 4/- ரூபா ;

(இ) குத்தகைக்காரர் இந்த நிலத்தில் மேற்படி சங்கத்துக்குத் தேவையான காரியாலயக்கட்டிடங்களைக் குத்தகைத் தொடங்கி ஒரு வருடகாலத்துக்குள் புத்தளம் மாவட்டம் அரசாங்க அதிபரின் திருப்திக்கமைவாகக் கட்டிமுடிக்க வேண்டும் ;

(ஈ) குத்தகைக்காரர் இந்த நிலத்தை மேற்படி சங்கத்திற்குத் தேவையான சங்கக்கட்டிடங்களைக் கட்டிப்பாவிக்கலாமே தவிர வேறு எவ்வித தேவைக்கும் பாவிக்கக்கூடாது.

4. இக்குத்தகை கொடுக்கக்கூடாதெனத் தகுந்த காரணங்களை கீழ்க் குறிக்கப்பட்டுள்ள திகதியிலிருந்து ஆறு வாரங்களுக்குள் தெரிவிக்காவிடில் இக்குத்தகை வழங்கப்படும்.

டீ. கே. வீ. ப்பீ. றணசிங்கா,
காணிக்கமிசனருக்காக.

காணிக்கமிசனர் காரியாலயம்,
கொழும்பு,
1965 ம் ஆண்டு நவெம்பர் மீ 12 ந் உ.

11-462—12.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,554

---

எனது இலக்கம். 4/8/1791.
அ. அ. இலக்கம். 2/8/1564.

## முடிக்குரிய காணிச்சட்டம் 21 (2) ன் கீழ் அறிவித்தல்

பதிவிலக்கம், கே/1772க் கொண்ட கொத்தமலைப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கச்சமாசம் பீ. பீ. 9002. பீ. பீ. ஏ. 2044, பீ. பீ. ஏ. 2717 ம் இலக்கத் துண்டுகளிலிருந்து 1 றூட், 39 பேர்ச் பரப்புள்ள முடிக்குரிய காணியை குத்தகையாகத்தரும்படி கேட்டு விண்ணப்பித்துள்ளது. இந்த நிலம் கெலபொட கிராம சேவகர் பிரிவு நம்பொடைகோரளே, கொத்தமலைப் பிரிவுக் கிராம அதிகாரியின் வசமக்கு உட்பட்டதாகும். இந்த நிலத்தில் மேற்படி சங்கச்சமாசம் ஒரு பயனை வைக்கும் கட்டிடமொன்றைக் கட்டும்.

2. கேட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :—

வடக்கு : நம்பொடைக் கிராமச்சங்கமும் நிலமும், தரிசு நிலமும் ;
கிழக்கு : பீ. பீ. ஏ./2024 ல் 1 ம் இலக்கத்துண்டு ;
தெற்கு : விவசாய இலாகாப் பூமி ;
மேற்கு : கிராமக்கோட்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பீ. பீ. ஏ. 2717, பீ. பீ. ஏ. 2717 ல் 1 ம் இலக்கத்துண்டு.

3. கேட்டுள்ள நிலம் குத்தகையாகக் கொடுக்கக்கூடியதாகவுள்ளது. எனவே ஏனைய நிபந்தனைகளுடன் பின்வருவனவற்றிறகும் அமைவாக இக்குத்தகை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது :—

(அ) குத்தகைக்காலம் : 30 வருடம் ;

(ஆ) வாடகை : வருடம் 4.00 ரூபா ;

(இ) குத்தகைக்காரர் இக்குத்தகைதொடங்கி ஒருவருட காலத்திற்குள் இந்த நிலத்தில் மேறபடி சஙகத்துத் தேவைக்கான பயனை வைக்கும அறையொன்றைக்கட்டி முடிக்கவேண்டும். இக்கட்டிடம் நுவரேலிய மாவட்ட அரசாங்க அதிபரின திருப்திக்கமை வாக இருக்கவேண்டும் ;

(ஈ)குத்தகைக்காரர் இந்த நிலத்தை மேற்படி சங்கத்துக்குத் தேவையான பயனை வைக்கும பாதுகாப்பறையைக கட்டுவதற்கேயல்லாது வேறெதறகும பாவிக்கக்கூடாது.

4. குத்தகை கொடுக்கக்கூடாதெனத் தகுந்த காரணங்களை எழுத்து மூலமாக கீழ்க்குறிக்கபபட்ட திகதியிலிருந்து ஆறு வாரங்களுக்குள் எனக்குத் தெரிவிக்காவிடில் இக்குத்தகை வழங்கபபடும்.

டீ. கே. வீ. ப்பீ. றணசிங்கா,
காணிக்கமிசனருக்காக.

காணிக்கமிசனர் காரியாலயம்,
கொழும்பு, 1965 ந் ஆண்டு நவம்பர் மீ 12 ந் உ.

11-460—12.11.65. ந் திகதிய வர்த்தமானி இல. 14,554

## அநுராதபுர புது நகரில் வியாபாரம் நடத்துவதற்கு குத்தகைக்குக் காணி கொடுத்தல்

அநுராதபுர புதிய நகரில் 4 ம் வர்த்தக பகுதியில் வியாபாரம் நடத்து வதற்கு 60 காணித்துண்டுகள் குத்தகைக்கு கொடுப்பதற்கு விண்ணப்பங் கள் அநுராதபுர பாதுகாப்புச்சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப் படுமென இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

2. கீழ்க்காணும் விஸ்தீரணமுள்ள காணித்துண்டுகள் குத்தகைக்குக் கொடுக்கப்படும் :

(i) 55′ × 16′ விஸ்தீரணமுள்ள 35 காணித்துண்டுகள் இரண்டு மாடிக் கட்டிடங்கள் நிறுவுதற்கு.

(ii) 55′ × 16′ விஸ்தீரணமுள்ள 25 காணித்துண்டுகள் ஒற்றைத்தட்டு மாடிக் கட்டிடங்கள் நிறுவுதற்கு.

3. குத்தகைகள் பெறுவதற்கு உரியவர்கள் பின்வரும் முறைகளின் படி தெரியப்படுவர் :

(அ) அநுராதபுர பழைய நகரில் வியாபாரம் நடத்தப் பாவிக்கப்பட்ட காணிகளின் சொந்தக்காரர் அல்லது குத்தகைக்காரர் 1956 ம் ஆண்டிற்குமுன் இங்கு தொடர்ச்சியாக இருந்தவர்களின் சொந் தக்காணிகள் பாதுகாப்புச்சபையினல் எடுக்கப்பட்டிருந்தால் அல் லது இக்கச்சேரி தினத்திற்குமுன் அல்லது இச்சபையினல் அளிக்கப்பட்ட காணிகள் உள்ளவர்களுக்கு இக்காணிகள் கொடுக் கப்படும்.

(ஆ) அநுராதபுர புதிய நகரம் விருத்தியடைவதற்காக சொந்தக்காரர் அல்லது குத்தகைக்காரரிடமிருந்து வியாபாரம் நடத்தும் நிலம் சுவீகரிக்கப்பட்டும் 1956 ம் ஆண்டுக்குமுன் இங்கு தொடர்ச்சி யாக இருந்தவர்களுக்கும் அல்லது இக்கச்சேரி தினத்திற்குமுன அல்லது இச்சபையினல் அளிக்கப்பட்ட காணிகள் உள்ளவர் களுக்கு இக்காணி கொடுக்கப்படும்.

(இ) அநுராதபுர பழைய நகரிலுள்ள வியாபாரம் நடத்துமிடத்தில் வாடகைக்கு இருந்தவர்களும் 1956 ம் ஆண்டு வரையும் தொடர்ச்சியாய் பதியப்பட்ட வியாபாரம் செய்தவராயும் இருத் தல் வேண்டும்.

(ஈ) புதிய நகரின் அரசாங்கக் கட்டிடத்திலுள்ள வியாபார ஸ்தாபனங் களுக்கு மாற்றப்பட்டவர்களும் அதே இடங்களுக்குப் பதில் இடம் குத்தகைக்குக் கிடைப்பதால் அக்கடையை அரசாங்கத்திடம் ஒப்படைக்க விரும்புவர்களும், இப்போகிடைக்கும் புது இடத்தில் வர்த்தக ஸ்தாபனம் கட்டி முடிக்கத்தக்கவராயும் வேணடும்.

(உ) அநுராதபுரத்தில் புதிதாக வியாபாரம் செய்ய எத்தனிப்போர், இவர்களின விண்ணப்பங்களை மேற் கூறப்பட்டிருக்கும் (அ) தொடங்கி (ஈ) வரை இருப்பவர்களின் தகுதிக்கேற்பக கொடுதது மிகுதியாய் காணி இருந்தாலே கவனத்திற்கு எடுக்கப்படும்.

4. காணிக்கச்சேரி பழைய நகரிலுள்ள அநுராதபுர பாதுகாப்புச்சபை யில் 1965 ம் ஆண்டு டிசம்பர் மாதம் இரண்டாம் கிழமை நடைபெறும். சரியான திகதியும் நேரமும் விண்ணப்பகாரருக்குத் தனித்தனியே அறிவிக்கப்படும். விண்ணப்பக்காரர் தாமாகவோ அல்லது தம்முடைய பிரதிநிதிமூலமாகவோ காணிக்கச்சேரிக்குப் பிரசன்னமாயிருததல் வேண் டும்.

5. தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பகாரர்களும் கீழ்க் கொடுக்கப்பட்டிருக்கும் குத்தகை நிபந்தனைகளுக்கு அமைதல் வேண் டும் :

(அ) குத்தகைக் காலம் : 99 வருடம்.

(ஆ) குத்தகைக்காரர் திருத்தப்படாத காணியின் விலையின் நாலு வீததொகையை வருடா வருடம் வாடகையாகக் கட்டவேண டும்.

(இ) குத்தகைக்காரர் என்னல் முன் அங்கீகரிக்கப்பட்ட படத்தின்படி குத்தகை தொடங்கிய ஒரு வருடத்திற்குள் தன் செலவில் வர்த் தக ஸ்தாபனம் கட்டி முடிக்க வேண்டும்.

(ஈ) குத்தகைக்காரர் குத்தகைதொடங்கி 6 மாத காலத்திறகுள் இக் காணிகளுள கட்டிடம் கட்டி முடிக்க வேண்டும்.

(உ) குத்தகைக்காரர் இக்காணியை வர்த்தகம் சம்பந்தமான இடமாக மட்டும் பாவிக்க வேண்டும்.

(ஊ) குத்தகைக்காரர் அநுராதபுர பாதுகாப்புச் சபை முகாமையாள ரின எழுத்து மூலம் பெற்ற உத்தரவின்றி ஒரு கட்டிடத்திற்கு மேல் கட்டப்படாது.

(எ) என்னிடமிருந்து எழுத்து மூலம் அனுமதி பெருமல் குத்தகைக் காரர் இக்காணியை வாடகைக்குக் கொடுக்கவோ, நனகொடை செய்யவோ, ஈடு அல்லது வேறு ஏதாவது செய்யவோ முடியாது.

5. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் விண்ணப்ப மாதிரிப பத்திரத்தின் படி 30.11.1965 க்கு முன கிடைக்கக்கூடியதாக அநுராதபுர பாதுகாப்புச் சபைத் தலைவருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். காணிகள் இருக்கும் இடங்கள வேண்டுமாயின அநுராதபுர பாதுகாப்புச் சபைக் காரியாலயததில் பெற்றுக் கொள்ளலாம்.

கே. டி. எம். சீ. பண்டார,
தலைவர்,
அநுராதபுர பாதுகாப்புச் சபை.

அநுராதபுர பாதுகாப்புச் சபை,
அநுராதபுரம்,
1965 ம் ஆடு நவம்பர் மீ 3 ந௳.

### மாதிரிப் பத்திரம்

### அநுராதபுர புதுநகரில் வர்த்தகம் செய்ய நிலக்குத்தகைக்கு விண்ணப்பம்

1. முழுப்பெயர் :————.
2. விலாசம் :————.
3. பிறந்த இடமும் சாதியும் :————.
4. (அ) விவாகம் ஆயினரா :————.
   (ஆ) குடும்பத்தில உள்ளோர்களின் தொகை :————.
5. தொழில் :————.
6. வருடாந்த வருமானம் :————.
7. புதிய நகரத்தில் வர்த்தகம் செய்யும் இடம் பெற்றிருக்கிறீரா ? பெற்றிருந்தால இலக்கம் :————.
8. பாதுகாப்புச் சபையினல எடுக்கப்பட்ட காணியின் சொந்தக்காரரா அல்லது வாடகைக்காரரா? :————. (விபரங்கள கொடுக்கவும்)
9. பாதுகாப்புச் சபை எல்லைக்குள் 8 ல குறிக்கப்படாத வேறு காணிகள சொந்தமாய் உண்டா ? :————. (விபரங்கள கொடுக்கவும்)
10. அநுராதபுரத்தில வசிக்கும் காலம் :————.
11. நிரந்தரமாக வசிக்கும் இடமும் காலமும் :————.
12. காணி பெறுவதற்கு எந்தப் பகுதியில தகுதியுடையீர் :————. (மேலேயுள்ள 3 ம் பந்தியின்படி)
13. வேறு விபரங்கள :————.

————————,
விண்ணப்பகாரரின ஒப்பம்.

திகதி :————.

11-389—12.11.65 ந திகதிய வர்த்தமானி இல. 14,554

---

## அநுராதபுர புது நகரில் மூன்றும் பகுதியில் குடியிருக்கும் நிலம் குத்தகைக்குக் கொடுத்தல்

அநுராதபுர புதிய நகரில் மூன்றும் பகுதியில் குடியிருக்கும் இடம் குத்தகைக்குக் கொடுப்பதற்கு விண்ணப்பங்கள் அநுராதபுர பாதுகாப்புச் சபைத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படுமென இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

2. குத்தகைகள் பெறுவதற்கு உரியவர்கள் பின்வரும் முறைகளின் படி தெரியப்படும் :—

(அ) 1956 ம் ஆண்டிற்கு முன் புனிதநகரில் சொந்தமாகவோ அல்லது குத்தகைக்கோ தொடர்ச்சியாக இருந்தவர்களின் காணிகள் பாதுகாப்புச் சபையினல் எடுக்கப்பட்டிருந்தால் அல்லது இக் கச்சேரி தினத்திற்குமுன் அல்லது இச்சபையினல் அளிக்கப் பட்ட காணிகள் உள்ளவர்களுக்கு இக்காணிகள் கொடுக்கப்படும்.

(ஆ) அநுராதபுர புதிய நகரின் விருத்தியடைவதற்காக சொந்தக்காரர் அல்லது குத்தகைக்காரரிடமிருந்து குடியிருப்பு நிலம் சுவீ கரிக்கப்பட்டவர்களுக்கும், 1956 ம் ஆண்டுக்குமுன் இங்கு தொடர்ச்சியாக இருந்தவர்களுக்கும் அல்லது இக்கச்சேரிதினத் திற்குமுன் அல்லது இச்சபையினல அளிக்கப்பட்ட காணிகள் உள்ளவர்களுக்கு இக்காணி கொடுக்கப்படும்.

(இ) அநுராதபுர பழைய நகரில் குடியிருக்கும் இடங்களின் சொந்தக் காரராயும் 1956 ம் ஆண்டுவரையும தொடர்ச்சியாகச சொந்தக் காரராயும் இருத்தல வேண்டும்.

(ஈ) இவ்வறிவித்தலுக்குமுன் 10 வருட காலம் அநுராதபுர மாவட் டத்தில தொடர்ச்சியாக இருத்தல வேண்டும்.

(உ) அநுராதபுரத்தில் நிரந்தரமாய் வசிக்க விரும்புவர்கள்.

3. காணிக் கச்சேரி பழைய நகரிலுள்ள அநுராதபுர பாதுகாப்புச் சபையில் 1965ம் ஆண்டு டிசம்பர் மாதம் மூன்றும் கிழமை நடைபெறும். சரியான திகதியும் நேரமும் விண்ணப்பகாரருக்குத் தனிததனியே அறிவிக்கப்படும். விண்ணப்பகாரர் தாமாகவோ அல்லது தமமுடைய பிரதிநிதிமூலமாகவோ காணிக்கச்சேரிக்குப் பிரசன்னமாயிருத்தல் வேண்டும்.

4. தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பகாரர்களும் கீழ்க் கொடுக்கப்பட்டிருக்கும் குத்தகை நிபந்தனைகளுக்கு அமைதல் வேண்டும்.

(அ) குத்தகைக்காலம் : 99 வருடம்.

(ஆ) குத்தகைக்காரர் திருத்தப்படாத காணியின் விலையில் நாலுவீதத் தொகையை வருடாவருடம் வாடகையாகக் கட்ட வேண்டும்.

(இ) குத்தகைக்காரர் எனறுல் முன் அங்கீகரிக்கப்பட்ட படத்தின்படி குத்தகை தொடங்கிய ஒருவருடத்திற்குள் தன் செலவில் குடியிருக்கும் கட்டிடம் கட்டி முடிக்க வேண்டும்.

(ஈ) குத்தகைக்காரர் குத்தகை தொடங்கி 6 மாத காலத்திற்குள இக்காணிக்குள் கட்டிடம் கட்டி முடிக்க வேண்டும்.

உ) குத்தகைக்காரர் இவ்விடத்தை வசிக்கும் இடமாக மட்டும் பாவிக்க வேண்டும்.

(ஊ) குத்தகைக்காரர் அநுராதபுர பாதுகாப்புச் சபை முகாமையாளரின் எழுத்து மூலம் பெற்ற உத்தரவின்றி ஒரு கட்டிடத்திற்கு மேல் கட்டப்படாது.

(எ) என்னிடமிருந்து எழுத்துமூலம் அனுமதிபெருமல் குத்தகைக் காரர் இக்காணியை வாடகைக்குக் கொடுக்கவோ நன்கொடை செய்யவோ, ஈடு அல்லது வேறு ஏதாவது செய்ய முடியாது.

(ஏ) கீழே கொடுக்கப்பட்டிருக்கும் விண்ணப்ப மாதிரிப் பத்திரத்தின் படி 30.11.1965 முன் கிடைக்கக் கூடியதாக அநுராதபுர பாதுகாப்புச் சபைத் தலைவருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

5. காணிகள் இருக்கும் இடங்கள் பற்றிய விபரங்கள் வேண்டுமாயின் அநுராதபுர பாதுகாப்புச் சபைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கே. டி. எம். சி. பண்டார,
தலைவர்,
அநுராதபுர பாதுகாப்புச் சபை.

அநுராதபுர பாதுகாப்புச் சபை,
அநுராதபுரம்,
1965 ம் ஆடு நவம்பர் மீ 3 ந் உ.

### மாதிரிப் பத்திரம்

### அநுராதபுர புது நகரில் குடியிருக்கும் நிலக்குத்தகைக்கு விண்ணப்பம்

1. முழுப் பெயர் :————.
2. விலாசம் :————.
3. பிறந்த இடமும், சாதியும் :————.
4. (அ) விவாகம் ஆகியவரா ? :————.
   (ஆ) குடும்பத்தில் உள்ளவர்களின் தொகை :————.
5. தொழில் :————.
6. வருடாந்த வருமானம் :————.
7. புதிய நகரத்தில் குடியிருக்கும் காணி பெற்றிருக்கிறீரா ? பெற்றிருந்தால் இலக்கம் :————.
8. பாதுகாப்புச் சபையினுல் எடுக்கப்பட்ட காணியின் சொந்தக்காரரா அல்லது வாடகைக்காரரா ? :————.
   (விபரங்கள் கொடுக்கவும்)
9. பாதுகாப்புச் சபை எல்லைக்குள் 8 ல் குறிக்கப்படாத வேறு காணிகள் சொந்தமாய் உண்டா ? (விபரங்கள் கொடுக்கவும்) :————.
10. அநுராதபுரத்தில் வசிக்கும் காலம் :————.
11. நிரந்தரமாக வசிக்கும் இடம் :————.
12. மேல் குறித்த அறிவித்தலின் 2 ம் பந்தியின் படி காணி பெறுவதறகு எந்த வகுப்பில் நீர் தகுதி உடையவராகிறீர் ?
13. கட்டவிருக்கும் வீட்டின் பெறுமதி :————.
14. உமது செலவிலா அல்லது தேசிய வீடமைப்புக் கந்தோரின் கடனுதவியிலா வீடுகட்ட எத்தனிக்கிறீர் ? :————.
15. எவ்வளவு செலவு செய்ய முடியும் :————.
16. வேறு விபரங்கள் :————.

விண்ணப்பக்காரரின் ஒப்பம்.

திகதி :————.

11-390—12.11.65 ம் திகதிய வர்த்தமானி இல. 14,554

---

எனது இலக்கம் 4/12/563
அ. அ. இலக்கம். 3/50/1/2448

## முடிக்குரிய காணிச்சட்டம் 21 (2) ன் கீழ் அறிவித்தல்

இத்தால் அறிவிக்கப்படுவது யாதெனில், திருமதிகள் மிலிநு அலுவிகார,ஞலின் அலுவிகார, டீ. கொடித்துவக்கு ஆகிய அலுவிகார மகிலா சமித்திய நம்பிக்கைப்பொறுப்பாளர்கள், மாத்தளை மாவட்டம், மாத்தளை காரியாதிகாரியின் பிரிவு, அலுவிகரை எனப்படும் கிராமத்திலிருந்து இலககம் 39 ம் ஆரம்பப்படத்திலிருந்து 2 ம் இலக்கத் துண்டை அலுவிகார மகிலாசமித்திய கட்டுவதற்காகக்கேட்டு விண்ணப்பித்துள்ளார்கள். குத்தகையாகக்கேட்டு விண்ணப்பித்துள்ள காணியின் பரப்பு 0 ஏ. 0 று. 1·39 பேர். ச்சாகும்.

2. விண்ணப்பித்துள்ள காணி குத்தகையாகக் கொடுக்கக்கூடியதாக விருக்கின்றது. எனவே வினை நிபந்தனைகளுடன் கீழ்வருவனவற்றிற்கும் அமைய இக்காணியைக் குத்தகையாகக் கொடுக்கத்தீர்மானிக்கப்பட்டுள்ளது.

3. (அ) காலம் : 5 வருடம்;
(ஆ) குத்தகை வருட மொன்றுக்கு ரூபா 6;
(இ) குத்தகைக்காரர் இந்த நிலத்தில் குத்தகைதொடங்கி 6 மாதத்திறகுள் மாத்தளை அரசாங்க அதிபரின திருப்திக்கமைய இந்த நிலத்தில் மகிலாசமித்தியக்கட்டிடத்தைக்கட்டி முடிக்க வேணடும்;
(ஈ) குத்தகைக்காரர் இந்த நிலத்தில் அலுவிகாரை மகிலா சமித்தியக் கட்டிடத்தைக்கட்டுவதறகுப் பாவிக்கலாமே தவிர வேறு எவ்வித தேவைக்கும் பாவிக்கக்கூடாது.

4. இக்குத்தகை கொடுக்கக்கூடாதென தகுந்த காரணங்களை கீழ்க் குறித்த திகதியிலிருந்து 6 வாரங்களுக்குள் எழுத்துமூலம் தெரிவித்தாலேயல்லாது இக்குத்தகைகொடுக்கப்படும்.

சீ. ஜே. சேரசிங்கா,
காணிக்கமிசனர்.

காணிக்கமிசனர் காரியாலயம்,
கொழும்பு, 1965 ந் ஆடு நவம்பர் மீ 12 ந் உ.

11-463—12.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,554

---

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனுல் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில் இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.